

தி.மு.கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் கோவை செல்வராஜ் அவர்களின் மறைவையொட்டி நேற்று அவரது இல்லத்திற்கு, மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி நேரில் சென்று அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்து அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்தார். உடன் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ. ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்து, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டனர். கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா. பழனிச்சாமி, கார்த்திக் செல்வராஜ், ச.கார்த்திகேயன்,சோமு சந்தோஷ், கழக நிர்வாகிகள் அவரது உடலுக்கு மரியாதை செலுத்தினர்.

கழகத்தின் கொள்கைகளை மேடைகளில் ஆணித்தரமாக எடுத்துரைத்தவர்!

# கோவை செல்வராஜ் மறைவு என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, நவ.10-**

**கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் கோவை செல்வராஜ் மறைவிற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-**



முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளருமான கோவை செல்வராஜ் அவர்கள் திடீரென்று மரணமடைந்தார் என்ற செய்தி கேட்டு பேரதிர்ச்சிக்குள்ளானேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, கழகத்தின் கொள்கைகளை, கருத்துகளை விவாதங்களிலும், மேடைப் பேச்சுகளிலும் ஆணித்தரமாக எடுத்து வைத்தவர்.

சமீபத்தில் நான் கோவை சென்றிருந்த போது, அங்கு அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஆர்வத்துடன் பங்கேற்ற அவர், நிகழ்ச்சி நிறைவு பெற்றதும் என்னைச் சந்தித்து, "நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைந்திருந்தது" என்று நெஞ்சாரப் பாராட்டிவிட்டு, "மகனின் திருமணத்தை வைத்திருக்கிறேன். திருமணம் முடிந்து மணமக்களுடன் வந்து தங்களிடம் சென்னையில் வாழ்த்துப் பெறுகிறேன்" என்றார். ஆனால் இன்று மகனின் திருமணம் நடந்தேறி வந்து கொண்டிருந்தபோதே, அவருக்குத் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்தார் என்ற செய்தி, என்னை ஆழ்ந்த வேதனையிலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்தியது.

திரு.கோவை செல்வராஜ் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# கடலூர் மேற்கு மாவட்ட சார்பு அணிகளின் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- – அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!

*கடலூர், நவ. 10-*

*கழக தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைகிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதல்படி கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் மகளிர் உறுப்பினர் சேர்க்கை முகாமை கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வெ.கணேசன் நெய்வேலி தொ.மு.ச அலுவகத்தில் இன்று (10.11.2024) காலை 9.30 மணிக்கு துவக்கி வைக்கிறார்.*

*அதனை தொடந்து கடலூர் மேற்கு மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் கீழ் கண்ட அட்டவணைப்படி நடபெறுகிறது.*

*1. காலை: 10 மணி மகளிர் அணி, 2. காலை: 10.30 மணி இளைஞர் அணி, 3. காலை : 11 மணி மாணவர் அணி, 4. காலை: 11.30 மணி ஆதி திராவிடர் நலக்குழு அணி, 5. காலை : 12. மணி விளையாட்டு மேம்பாட்டு அணி, 6. காலை: 12.30 மணி வழக்கறிஞர் அணி, 7. மதியம்: 1 மணி விவசாய அணி, 8. மதியம் : 1.30 மணி விவசாய தொழிலாளர் அணி, 9. மதியம்: 2. மணி சுற்றுச் சூழல் அணி, 10. மதியம்: 2.30 மணி தகவல் தொழில் நுட்ப அணி, 11. மதியம்: 3. மணி மகளிர் தொண்டர் அணி, 12. மதியம்: 3.30 மணி வர்தகர் அணி*

*அதுசயம் மாவட்ட அவைத்தலைவர் மற்றும் மாவட்ட துணைச் செயலாளர்கள், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்ட செயலாளர் - அமைச்சர் சி. வி. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி கல்வித் துறை சார்பில் நபார்டு RIDF XXVIII திட்டத்தின் கீழ் ரூபாய் 317.70 இலட்சம் மதிப்பீட்டில் விழுப்புரம், அரசினர் மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 15 வகுப்பறை கட்டிடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணை செயலாளருமான டாக்டர். இரா.இலட்சுமணன் வகுப்பறைகளை மாணவிகளின் பயன்பாட்டிற்கு ஒப்படைத்தார். உடன் மாவட்ட நகர செயலாளர் இரா.சக்கரை, நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, செ.மணிகண்டன், நகர்மன்ற உறுப்பினர்கள் புல்லட் மணி, மணவாளன், சிவக்குமார், சாந்தகுமார், பத்மநாபன், கோமதி பாஸ்கர், வெற்றிவேல், பிரபுதேவா, அசாரூதீன், ரகு, வைத்தியநாதன், கோவிந்தராஜ், சுந்தர், மணிவண்ணன், ஜோதி குமார், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் குமார், லட்சுமி நாராயணன், ஓம் ஹரி, ராம், ராஜி, அன்பு, பானாம்பட்டு முருகன், ரத்தினம், நவின் குணசேகரன், கிருஷ்ணமூர்த்தி, காசி மற்றும் அரசு அதிகாரிகள் தலைமை ஆசிரியர், கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

தஞ்சை மத்திய மாவட்டத்தில்

# பகுதி, ஒன்றியம் - பேரூர்க் கழகங்கள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*தஞ்சை, நவ. 10 -*

*கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலில் 200 க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கை நோக்கி தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) கூட்டம் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள் இன்னாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அந்தந்த தொகுதிக்குட்பட்ட மாநகரம், பகுதி, ஒன்றியம் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன்.*

*174 - தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதி எ.கே. எஸ்.விஜயன் -*

*தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரிதிநிதி, தொகுதி பார்வையாளர்*

*நாள் : 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை*

*நேரம் கழக அமைப்பு நடைபெறும் இடம்*

*காலை 10.00 மணி - கரந்தை பகுதி, கோட்டைப் பகுதி, மருத்துவக்கல்லூரி பகுதி அறிஞர் அண்ணா மன்றம், பழைய பேருந்து நிலையம், தஞ்சாவூர்.*

*காலை 11.00 மணி - தஞ்சை கிழக்கு ஒன்றியம், வல்லம் பேரூர் கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர்.*

*மாலை 04.00 மணி- கீழ வாசல் பகுதி கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர்.*

*173 திருவையாறு சட்டமன்ற தொகுதி பி.கேசவன். மாநில தகவல் தொழில் நுட்ப துணை செயலாளர்*

*தொகுதி பார்வையாளர்*

*நாள் : 11.11.2024 திங்கட்கிழமை*

*நேரம்கழக அமைப்பு நடைபெறும் இடம்*

*காலை 10.00 மணி - தஞ்சை மேற்கு ஒன்றியம், பூதலூர் வடக்கு ஒன்றியம், பூதலூர் தெற்கு ஒன்றியம் மற்றும் திருக்காட்டுப்பள்ளி பேரூர் - ரம்யா திருமண மண்டபம் பூதலூர்.*

*மாலை 04.00 மணி - தஞ்சை கிழக்கு ஒன்றியம், தஞ்சை வடக்கு ஒன்றியம், திருவையாறு தெற்கு ஒன்றியம், திருவையாறு வடக்கு ஒன்றியம், திருவையாறு பேரூர் மற்றும் மேலத்திருப்பூந்துருத்தி பேரூர்*

*சகாய மாதா திருமண மண்டபம், திருவையாறு*

*175 ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதி*



*பரணி.இ.எ.கார்த்திகேயன்*

*மாநில தேர்தல் பணிக் குழு செயலாளர்*

*தொகுதி பார்வையாளர்*

*நாள் : 12.11.2024 செவ்வாய்க்கிழமை*

*நேரம் கழக அமைப்பு நடைபெறும் இடம்*

*காலை 10.00 மணி*

*ஒரத்தநாடு கிழக்கு ஒன்றியம், ஒரத்தநாடு வடக்கு ஒன்றியம், ஒரத்தநாடு தெற்கு ஒன்றியம் மற்றும் ஒரத்தநாடு பேரூர் - எம். ஆர். திருமண மண்டபம் - ஒரத்தநாடு.*

*மாலை 04.00 மணி*

*திருவோணம் வடக்கு ஒன்றியம், தஞ்சை தெற்கு ஒன்றியம், மற்றும் ஒரத்தநாடு மேற்கு ஒன்றியம் ச ங க ர் மஹால் செல்லம்பட்டி, பொய்யுண்டார்கோட்டை*

*பொருள்*

*1. 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள்*

*2. கழக ஆக்கப்பணிகள்*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (08.11.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் நலத்துறை ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை செயலாளர் கொ.வீரராகவ ராவ், தமிழ்நாடு கட்டுமான வாரிய செயலாளர் க.ஜெயபால் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நீர்வழி விமானச் சேவை!

திருமலை, நவ. 10–


ஆந்திராவில் முதல் முறையாக பிரகாசம் அணையில் இருந்து ஸ்ரீசைலம் அணை வரை நீர்வழி விமான சேவையை முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று தொடங்கி வைத்தார். ஆந்திர மாநில அரசு முதல் முறையாக விஜயவாடாவில் கிருஷ்ணா நதி மத்தியில் அமைந்துள்ள பிரகாசம் அணையில் இருந்து ஸ்ரீசைலம் அணை வரை நீர்வழி விமான சேவையை சோதனை முறையில் தொடங்கப்பட உள்ளது. இதனை நேற்று முதல்வர் சந்திரபாபு நாயுடு, மத்திய விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு ஆகியோர் இணைந்து தொடங்கி வைக்க வைத்தனர்.

தொடர்ந்து, விஜயவாடா பிரகாசம் அணையில் இருந்து இருவரும் நீர்வழி விமானத்தில் ஏறி ஸ்ரீசைலம் சென்று மீண்டும் அதே விமானத்தில் விஜயவாடா வர உள்ளனர். ஒரே விமானத்தில் நீரிலும், ஆகாயத்திலும் பறக்கும் புது அனுபவத்தை வழங்கும் விதமாக சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் இந்த விமான சேவையை சோதனை முறையில் இயக்கப்பட உள்ளது. இதற்காக நிபுணர்கள் வழிகாட்டுதலின்படி விஜயவாடா கிருஷ்ணா நதி கரையில் இருந்து நேற்று முன்தினம் அதிகாரிகளால் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்தது.

முதல்வர் சந்திரபாபு நாயுடு, மத்திய அமைச்சர் பயணம் செய்யும் இந்த நீர்வழி விமான சேவையில் ஸ்ரீசைலம் செல்வதை 1000 பார்வையாளர்கள் காணும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விஜயவாடா நகர காவல் ஆணையர் ராஜசேகர பாபு தெரிவித்தார். இந்நிலையில் விஜயவாடா கிருஷ்ணா நதியில் இருந்து புறப்பட்ட நீர்வழி விமானம் சோதனை ஓட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இந்த விமானம் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தை அடைந்தது. பின்னர் விஜயவாடாவிற்கு அதிகாரிகள் பயணம் செய்து சோதனை மேற்கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்னூர் மு. அரங்கநாதன்
### நவம்பர் 10 (2014)



**நீலகிரி மாவட்டத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.**

**குன்னூர் நகர பொருளாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**குன்னூர் நகராட்சித் தலைவர், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தியவர்.**

**கழகப் பணியில் தொய்வு ஏற்படக்கூடாது என்று திருமணம்கூட செய்து கொள்ளாதவர்.**

**இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து பலமுறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறைமுகம் நா. இராமதாஸ்
### நவம்பர் 10 (2016)



**துறைமுகம் பகுதி வட்டாரத்தின் ஆரம்ப கால கழகத் தோழர்.**

**கழகத்திற்கு, தொடக்க காலத்தில், பகுதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டபோது, துறைமுகம் பகுதிக் கழகத்தின் செயலாளராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக்குரியவர் இவர்.**

**கழக மூத்த தலைவர்களுடனும், முன்னோடிகளுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.**

**ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**